©
தமிழ்நாடு அரசு
2021

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 2.40 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 13] சென்னை, புதன்கிழமை, மார்ச் 31, 2021
பங்குனி 18, சார்வரி, திருவள்ளுவர் ஆண்டு–2052

## பகுதி II—பிரிவு 2 இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

**வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை.**

**அறிவிக்கை**

*[அரசாணை (நிலை) எண்.191, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி [(UD4(2)]த் துறை, 30 டிசம்பர் 2020]*

தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர நாட்டுப்புற திட்டமிடல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 10–ஆம் பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், 25–09–1974 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழில்*** பாகம் II பிரிவு 2–இல் 495 ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி நிருவாகத் துறையின் II(2)/RUL/4115/74 ஆம் எண் அறிவிக்கையில் பின்வரும் திருத்தத்தை இதனால் செய்கிறார். அவ்வாறு செய்வதற்கான நோக்கம், இச்சட்டத்தின் மேற்சொன்ன 10–ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின், (b) பகுதியில் கோரியுள்ளவாறாக ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளது.

**திருத்தம்**

மேற்சொன்ன அறிவிக்கையில் உள்ள, ''அட்டவணை''க்குப் பதிலாக, பின்வரும் ''அட்டவணை'' அமைத்துக் கொள்ளப்பட வேண்டும், அதாவது;–

**''அட்டவணை''**

| *தொடர் எண்* | *உள்ளூர் திட்டமிடல் பகுதியின் பெயர்* | *வருவாய் கிராமங்களின் எண் மற்றும் பெயர்* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| 1. | ஈரோடு | **ஈரோடு மாநகராட்சி** |
| | | 17 பெரியசேமூர் |
| | | 19 பிராமண பெரிய அக்ரஹாரம் |
| | | 20 நஞ்சை தளவாய் பாளையம் |
| | | 21 வைரபாளையம் |
| | | 38 சர்க்கார் சின்ன அக்ரஹாரம் |
| | | 39 பி.எஸ். அக்ரஹாரம் |
| | | 22 ஈரோடு |
| | | 40 பீளமேடு |
| | | 37 சூரம்பட்டி |
| | | 41 வெண்டிபாளையம் |

**அட்டவணை**—தொடர்ச்சி

| *தொடர் எண்* | *உள்ளூர் திட்டமிடல் பகுதியின் பெயர்* | *வருவாய் கிராமங்களின் எண் மற்றும் பெயர்* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| | | 18 சர்க்கார் பெரிய அக்ரஹாரம் |
| | | 15 எல்லபாளையம் |
| | | 16 கங்காபுரம் |
| | | 34 திண்டல் (மேல்) |
| | | 23 வில்லரசம்பட்டி |
| | | 35 திண்டல் (கீழ்) |
| | | 36 முத்தம்பாளையம் |
| | | 6 குமிலம் பரப்பு |
| | | 5 சூரியம்பாளையம் |
| | | **ஈரோடு வட்டம்** |
| | | 24 நசியனூர் |
| | | 9 சித்தோடு |
| | | 8 பேரோடு |
| | | 1 கரை எல்லபாளையம் |
| | | 2 எலவமலை |
| | | 4 அணைநாசுவம்பாளையம் |
| | | 11 தமிர்பாளையம் |
| | | 12 வேட்ட பெரிய பாளையம் |
| | | 13 சாமிக்கவுண்டம்பாளையம் |
| | | 14 அட்டயம்பாளையம் |
| | | 27 ராயபாளையம் |
| | | 26 மூலக்கரை |
| | | 25 கூரப்பாளையம் |
| | | 29 தொட்டணி |
| | | 30 வேப்பம் பாளையம் |
| | | 31 புத்தூர் புதுப்பாளையம் |
| | | 28 கதிரம்பட்டி |
| | | 32 பவளத்தாம்பாளையம் |
| | | 33 நஞ்சனாபுரம் |
| | | 7 நல்லாகவுண்டம்பளையம் |
| | | 3 மேட்டுநாசவம்பாளையம் |

| *தொடர் எண்* | *உள்ளூர் திட்டமிடல் பகுதியின் பெயர்* | *வருவாய் கிராமங்களின் எண் மற்றும் பெயர்* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| | **மொடக்குறிச்சி வட்டம்** | |
| | | 15 மொடக்குறிச்சி |
| | | 16 ஆவல் பூந்துரை |
| | | 6 புதுார் |
| | | 7 புஞ்சை லக்காபுரம் |
| | | 8 நஞ்சை லக்காபுரம் |
| | | 9 சாத்தம்பூர் |
| | | 10 காங்கயம் பாளையம் |
| | | 11 நஞ்சை ஊத்துக்குளி |
| | | 5 கஸ்பாபேட்டை |
| | | 4 துய்யம்பூந்துரை |
| | | 1 கனகாபுரம் |
| | | 24 வேலம்பாளையம் |
| | | 3 பூந்துறை சேமூர் |
| | | 14 புஞ்சை காலமங்கலம் |
| | | 12 குருக்கப்பாளையம் |
| | | 13 நஞ்சை காலமங்கலம் |
| | **பெருந்துரை வட்டம்** | |
| | | 12 பள்ளபாளையம் |
| | | 11 பெத்தாம்பாளையம் |
| | | 13 காஞ்சிக்கோயில் |
| | | 21 கருமாண்டி செல்லிப் பாளையம் |
| | | 51 பெருந்துரை |
| | | 59 சென்னிமலை |
| | | 23 நல்லாம்பட்டி |
| | | 31 பெரிய வீர சங்கிலி |
| | | 30 சின்ன வீர சங்கிலி |
| | | 29 பாப்பம்பாளையம் |
| | | 28 போலநாயக்கம்பாளையம் |
| | | 5 திங்களூர் |
| | | 10 கோயில்பாளையம் |
| | | 14 ஓலப்பாளையம் |

| தொடர் எண் | உள்ளூர் திட்டமிடல் பகுதியின் பெயர் | வருவாய் கிராமங்களின் எண் மற்றும் பெயர் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | 15 முள்ளம்பட்டி |
| | | 16 கந்தம்பாளையம் |
| | | 17 பெரியவிலாமலை |
| | | 18 சின்னவிலாமலை |
| | | 19 திருவாச்சி |
| | | 20 பூவம்பாளையம் |
| | | 22 பாலக்கரை |
| | | 24 ஊஞ்சப்பாளையம் |
| | | 25 கல்லாகுளம் |
| | | 26 செல்லப்பம்பாளையம் |
| | | 27 தலையம்பாளையம் |
| | | 35 நிமிட்டிப்பாளையம் |
| | | 36 சின்னமல்லன்பாளையம் |
| | | 37 துடுப்பதி |
| | | 38 சுள்ளிப்பாளையம் |
| | | 39 பட்டகாரம்பாளையம் |
| | | 41 குள்ளம்பாளையம் |
| | | 40 ஆமிக்கவுண்டம்பாளையம் |
| | | 34 சீனாபுரம் |
| | | 33 கரண்டிபாளையம் |
| | | 32 மேட்டுப்புதூர் |
| | | 43 மூங்கில்பாளையம் |
| | | 46 மாரப்பநாயக்கன்பாளையம் |
| | | 44 விஜயாபுரி |
| | | 45 அக்ரஹார விஜயமங்களம் |
| | | 49 கம்பிலியம்பட்டி |
| | | 42 பொன்முடி |
| | | 47 கொங்கம்பாளையம் |
| | | 60 வாய்பாடி |
| | | 48 வாரபாளையம் |
| | | 52 வடமுகம் வெள்ளோடு |
| | | 53 புங்கம்பாடி |

| *தொடர் எண்* | *உள்ளூர் திட்டமிடல் பகுதியின் பெயர்* | *வருவாய் கிராமங்களின் எண் மற்றும் பெயர்* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| | | 55 முகாசிபுலவபாளையம் |
| | | 56 தென்முகம் வெள்ளோடு |
| | | 57 முகாசிபிடாரியூர் |
| | | 58 அட்டவணைபிடாரியூர் |
| | | 54 கவுண்டச்சிபாளையம் |

**அறிவிக்கை–II**

*[அரசாணை (நிலை) எண்.191, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி [(UD4(2)]த் துறை, 30 டிசம்பர் 2020]*

தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர நாட்டுப்புற திட்டமிடல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 10–ஆம் பிரிவைச் சேர்ந்த (6) உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன சட்டத்தின் கீழ் இயற்றப்பட்ட விதிகள் மற்றும் ஆணைகள், பிறப்பிக்கப்பட்ட விதிமுறைகள் மற்றும் உத்தரவுகள் மற்றும் வழங்கப்பட்ட அதிகாரங்கள் மற்றும் முந்தைய ஈரோடு உள்ளூர் திட்டமிடல் பகுதியில் இதுவரையில் செயலிலிருந்தவை, தற்போது அறிவிக்கப்பட்ட ஈரோடு உள்ளூர் திட்டமிடல் பகுதியில் இதுவரையில் செயலிலிருந்தவை, தற்போது அறிவிக்கப்பட்ட ஈரோடு உள்ளூர் திட்டமிடல் பகுதிக்கும் பொருந்தும் என இதனால் உத்தரவிடுகிறார்.

**D. கார்த்திகேயன்,**
*அரசுச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்.**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தித் (மொ.பெ)த் துறை.*

## தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை.

**அறிவிக்கை**

*[அரசாணை (நிலை) எண்.214, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (I1)த் துறை, 30 டிசம்பர் 2020]*

தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு உடலுழைப்பு தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பை முறைப்படுத்தலும், பணி நிலைமைகளும்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 33/1982) 6 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு மாநிலத்தில் பட்டாசு மற்றும் தீப்பெட்டித் தயாரிப்புத் தொழிலில் பணிபுரிவோருக்காக தமிழ்நாடு பட்டாசு மற்றும் தீப்பெட்டித் தொழிலாளர்கள் நல வாரியத்தை" இதனால் ஏற்படுத்தியுள்ளார்.

**முகமது நசிமுத்தீன்,**
*அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் .*

(தமிழாக்கம்)

**இ. சுபாமதி,**
*இயக்குநர் (மு.கூ.பொ.),*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழி பெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (ப) எண்.82, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J2)த் துறை, 22 பிப்ரவரி 2021]*

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 9 ஆம் பிரிவு மற்றும் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (a) பகுதியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், 1.7.2020 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II பிரிவு 2 இல், 545 முதல் 546 ஆம் பக்கங்கள் வரையில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறையின் II(2) தொ.வே,வா/406/2020 ஆம் எண் அறிவிக்கையில் பின்வரும் திருத்தங்களை இதனால் செய்கிறார்.

**திருத்தங்கள்**

மேற்சொன்ன அறிவிக்கையில், இரண்டு இடங்களில் இடம்பெற்ற ‘‘நிர்ணயித்தல்’’ என்ற சொற்றொடருக்குப் பதிலாக, திருத்தியமைத்தல் என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளபட வேண்டும்.

**முகமது நசிமுத்தீன்,**
*அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழி பெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (2ப) எண்.12, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, 26 பிப்ரவரி 2021]*

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி, 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, வெளியிடக் கருதிய அறிவிக்கையின் பின்வரும் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் கோரியுள்ளவாறு, இதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

2. இது தொடர்பாக 17.5.2021 ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்னர், எவரிடமிருந்தேனும் வரப்பெறுகிற யாதொரு மறுப்புரை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்குமென்று, இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின், அதனை டீஎம்ஸ் வளாகம், சென்னை–600 006–இல் உள்ள தொழிலாளர் ஆணையாளர் வாயிலாக அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**வரைவு அறிவிக்கை**

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி, 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் 10–7–2019 ஆம் நாளிட்ட **தமிழ்நாடு அரசிதழின்** பாகம் II பிரிவு 2ல் 665 முதல் 666 வரையிலான பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் II(2)/தொ.வா/563/2019 ஆம் எண் அறிவிக்கையில் பின்வரும் திருத்தத்தை இதனால் செய்கிறார்.

**திருத்தம்**

மேற்சொன்ன அறிவிக்கையின் விளக்கங்களில் அகவிலைப்படியின் பத்தி (1) இன், இனம் (i) இல், ‘‘நாளொன்றுக்கு’’ என்ற சொற்றொடருக்குப் பதிலாக ‘‘மாதமொன்றுக்கு’’ என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

2. இந்த **அறிவிக்கை**, 10.7.2019 ஆம் நாளன்று செயலுக்கு வந்துள்ளதாக கருதப்படும்.

**முகமது நசிமுத்தீன்,**
*அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் .*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழி பெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.